ஈஷா ஸ்பெஷல்





# புத்துணர்ச்சி கிராமம்!



வடசித்தூர் கிராமத்தின் கூலித் தொழிலாளி செல்வராஜ். மனைவி மணிமேகலை. அரசின் நல உதவித் திட்டங்கள் என்னென்ன? அதனை எவ்விதம் பெறுவது என்கிற விவரம் தெரியாதவர்கள். கூலி வேலையுண்டு ஓலைக்குடிசையுண்டு என்று வாழ்பவர்கள். ஒருமுறை ஈஷா கிராமப்புற நடமாடும் மருத்துவ ஊர்தி, ஊருக்குள் வந்தபோது அதிசயப்பட்டார்கள். வீட்டு வாசலில் மருத்துவ உதவியா?! என வியந்தார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்து அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டு, ஈஷாவின் தன்னார்வத் தொண்டர் வழிகாட்டுதலில் 'கலைஞர் மருத்துவக் காப்பீடு' அட்டையைப் பெற்றுள்ளது அக்கூலித் தொழிலாளியின் குடும்பம்.

அரசின் பலவிதமான சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் எளிதில் கிராம மக்களைச் சென்றடைய வைக்கும் பாலமாக இருந்து இயங்கி வருகிறது ஈஷாவின் கிராமப் புத்துணர்வு மையம்.

கீரைப் பட்டணம் கதை என்கிற பெயரில், கீரைகளின் பயன்கள் குறித்தான விழிப்புணர்வு படம் ஈஷாவினால் பன்னப்பட்டிக் கிராமத்தில் திரையிடப்படுகிறது. பதினான்கு வயது விக்னேஷ், தினசரி சாப்பாட்டில் காய்கறி, கீரை என்றாலே ஒதுக்கி வைப்பவன். படம் பார்த்துச் சென்ற மறுநாளிலிருந்து, அம்மாவிடம் ஏதேனும் கீரை வாங்கி சமைக்கச் சொல்லி ஒரே நச்சரிப்பு. அம்மாவுக்கு ஏதொன்றும் புரியவில்லை. ''அம்மாவிடம் நான் பார்த்த படம் பற்றிச் சொன்னேன். 'நீ சோறு திங்க ஆரம்பிச்சதுலேர்ந்து அதையேதாண்டா நானும் சொல்லிட்டிருக்கேன்' என என்னைத் திட்டினாள். இப்போ ஒருநாள் விட்டு ஒரு நாள் கீரை சாப்பிடுகிறேன். காய்கறிகளையும் ஒதுக்கி வைப்பதில்லை!'' என்கிறான் விக்னேஷ்.



* செல்வராஜ் - மணிமேகலை

மேலோட்டமாகப் பார்த்தால் கீரை சாப்பிட வைப்பதும், கலைஞர் மருத்துவக் காப்பீடு அட்டை பெற்றுத் தருவதும் என்ன பெரிய சமூக சேவையா? எனக் கேட்கத் தோன்றும். கிராமப்புறக் குழந்தைகளுக்குத் தங்கள் உணவில் காய்கறிகளும் கீரை வகைகளும் பெருமளவு உட்கொள்ள வேண்டும் என்கிற உணர்வினை ஊட்டி, உண்ணச் செய்து விட்டாலே அவர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால ஆரோக்கிய வாழ்க்கைக்கு அச்சாரம் ஆகிவிடும்.





கிராமப்புற யோகா, மருத்துவம், கவுன்சிலிங் எனப் பல நிலைகளிலும் தொடர்ந்து வழிகாட்டி வருகிறது ஈஷா கிராமப் புத்துணர்வு மையம். பத்தொன்பது நடமாடும் இலவச மருத்துவ ஊர்திகள், 780 கிராம மக்களுக்கு சேவை செய்து வருகிறது. ஈஷா கிராம மருத்துவமனைகள் நான்கு இடங்களில் இயங்குகின்றன. கோவை அருகே பல்லடத்தில் உள்ள சேவை மையம் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோருக்குச் சேவை செய்கிறது. 2003ல் தொடங்கப்பட்ட ஈஷா கிராமப் புத்துணர்வு மையம், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி என மொத்தம் முப்பத்திமூன்று மாவட்டங்களில் சுமார் நான்காயிரத்து ஐந்நூறு கிராம மக்களைச் சென்றடைந்துள்ளது!

– சரவணன் திரு